# ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

சக்கராம்பாளையம், அகரம் அஞ்சல்,
எலச்சிப்பாளையம், திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம் - 637 202.
CELL : 99655 - 31727, 99655 - 35967.

பொதுத்தேர்வு, மார்ச் - 2019

## TENTATIVE ANSWER KEY

வகுப்பு – 12 பொதுத்தமிழ் மதிப்பெண் :90

| வ. எண் | விடை | MARKS | TOTAL MARKS |
|---|---|---|---|
| I. | பலவுள் தெரிக. (அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.) | | 6x1=6 |
| 1 | ஈ) சுவாமிமலை | 1 | |
| 2 | ஆ) இறையனார் | 1 | |
| 3 | அ) இத்தாலி | 1 | |
| 4 | ஆ) அப்துல் ரகுமான் | 1 | |
| 5 | அ) பாண்டிய நாடு | 1 | |
| 6 | இ) உழு நிலம் | 1 | |
| II. | அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. | | 8x1=8 |
| 7 | ஆ) பண்புத்தொகை | 1 | |
| 8 | ஆ) இராஜம் கிருஷ்ணன் | 1 | |
| 9 | அ) கொத்துப்பூ | 1 | |
| 10 | அ) வாழ்த்து | 1 | |
| 11 | இ) சட்டை - வல்லிக்கண்ணன் | 1 | |
| 12 | இ) அடுக்குத்தொடர் | 1 | |
| 13 | ஈ) நேர்மையே சிறந்த கொள்கை | 1 | |
| 14 | இ) பார், காடு | 1 | |



ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| **III.** | அ) குறுவினா(எவையேனும் மூன்றனுக்கு மட்டும்) | | **3x2=6** |
| 15 | **'அன்புடை மரபின் நின் கிளையோடார வல்சி தருகுவென்' இதன்கண் அமைந்துள்ள இறைச்சிப் பொருளைச் சுட்டுக.**<br>**இத்தொடரின் பொருள் :**<br>❖ 'நீ உன் சுற்றத்தோடு வருவாய் எனில் உண்ண உணவு தருவேன்' என்பதாகும்.<br>**இறைச்சிப் பொருள்.**<br>❖ மேற்கூறிய பொருட்குப் புறத்தே, தலைவனும் தலைவியும் மீண்டு வரின் நான் அவர்களுக்கு என் இல்லத்தின் கண் திருமணவிழா எடுத்து என் அன்பிற்குரிய சுற்றத்தாருடன் மகிழ்ந்திருப்பேன் என்று நற்றாய் கூறுவதாக இறைச்சிப் பொருள் தோன்றிற்று. | 2 | |
| 16 | **நில உலகத்தை விட மிகப்பெரியது எது?**<br>❖ ஆபத்துக் காலத்தில் ஒருவர் செய்த உதவி மிகச் சிறியதாய் இருந்தாலும் அது செய்யப்பட்ட காலத்தை நோக்கும்போது இந்நிலவுலகத்தைவிட மிகவும் பெரியதாகும். | 2 | |
| 17 | **சுந்தரகாண்டம் என்று பெயர் வரக்காரணம் யாது?**<br>❖ இராமாயணத்துள் ஐந்தாங்காண்டமாக விளங்குவது சுந்தரகாண்டம்.<br>❖ இக்காண்டமே காப்பியத்தின் முடிமணியாக விளங்குகிறது. இப்பகுதி முழுவதும் சிறிய திருவடியாகிய அனுமனின் செயல்களே சொல்லப்படுகின்றன.<br>❖ அனுமனுக்குச் சுந்தரன் என்னும் பெயரும் உண்டு என்பதால் அனுமனின் தலைமைப் பண்புகள் வீறு பெற்று விளங்கும் இக்காண்டம் **'சுந்தர காண்டம்'** எனலாயிற்று என்பர். | 1<br>1 | **2** |
| 18 | **'அந்தாதி' - விளக்குக.**<br>❖ அந்தம் + ஆதி = அந்தாதி. அந்தம் = இறுதி, ஆதி = முதல்.<br>❖ ஒவ்வொரு பாடலிலுமுள்ள இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அதற்கடுத்து வரும் பாடலின் முதலாக வரும்படி அமைத்துப்பாடுவது அந்தாதி எனப்படும்.<br>❖ அந்தாதி தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று அந்தாதி. இதனைச் சொற்றொடர் நிலை என்று வழங்குவதும் உண்டு. | 1/2<br>11/2 | **2** |

| | | | |
|---|---|---|---|
| | **ஆ) குறுவினா(எவையேனும் இரண்டனுக்கு மட்டும்)** | | **2x2=4** |
| 19 | **பழந்தமிழ் மக்கள் எத்தகைய கொள்கை உடையவர்களா இருந்தனர்?**<br>❖ யாரோடும் இனிமையாகப் பேசுதல்<br>❖ நடுநிலைமையாக இருத்தல்<br>❖ இயன்றவரையிற் பிறர்க்கு உதவிசெய்தல்<br>❖ பிறர்செய்த உதவியை எக்காரணம் கொண்டும் என்றும் மறவாதிருத்தல் முதலிய நல்லியல்புகளெல்லாம் பழங்காலத்து மக்களுடைய சிறந்த கொள்கைகளாகவும் பழக்கங்களாகவும் இருந்தன. | ½<br>½<br>½<br>½ | **2** |
| 20 | **'உய்த்து' என்னும் சொல் உணர்த்தும் பொருள் யாது?**<br>❖ மறைபொருள் ஒருவனுக்குச் **சுமையாக** இருந்ததென்பதும், பிறரிடம் **கொண்டுபோய்ச் சேர்த்தான்** என்பதும் **'உய்த்து'** என்ற சொல்லால் பெறப்படும். | 2 | |
| 21 | **குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்ட காலம் யாது? இவ்வகைக் கோயில்களை அமைத்த மன்னர்கள் யாவர்?**<br>❖ குடைவரைக் கோயில்கள் அமைக்கப்பட்ட காலம்- கி.பி. 6 ஆம் நூற்றாண்டு<br>**குடைவரைக் கோயில்களை அமைத்த மன்னர்கள்**<br>❖ பல்லவர்கள்<br>❖ பாண்டியர்கள்<br>❖ அதியர்<br>❖ முத்தரையர் | 1<br><br>1 | **2** |
| **IV.** | **அ) குறுவினா(எவையேனும் ஏழனுக்கு மட்டும்)** | | 7x2=14 |
| 22 | **வலிமிகா இடங்களில் உள்ள வல்லெழுத்துகளை நீக்கி எழுதுக.**<br>அ) கு□_ கு□_ வென்று _ புகைமண்டிலம் சூழ்ந்தது.<br>ஆ) வாழ்க _ தமிழ் என்று அவனா _சொன்னான் அறிந்து _ சொல் எனக்கு. | 1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 23 | **தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.**<br>அ) விழாவில் **அறிஞர் பலர்** பேசினர்.<br>ஆ) **இடப்பக்கம்** இருப்பது ஔவையார் சிலை அன்று. | 1<br>1 | 2 |
| 24 | **கொச்சைச் சொற்களைத் திருத்தி எழுதுக.**<br>அ) **கோழிமுட்டை தாழ்வாரத்தில்** உருண்டது.<br>ஆ) கொடு□த **செய்தியைக் கோவையாகப்** பேசு. | 1<br>1 | 2 |
| 25 | **பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.**<br>அ) டிசைன் - **வடிவமைப்பு**<br>ஆ) லோன் - **கடன்**<br>இ) ஜில்லா - **மாவட்டம்**<br>ஈ) உபந்நியாசம் - **ஆன்மீகச் சொற்பொழிவு** | ½<br>½<br>½<br>½ | 2 |
| 26 | **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.**<br>அ) பாலாத்**தோப்பில்** பலாப்**மூசு** பறித்து வந்தேன்<br>ஆ) யானை **பாகனோடு** ஆட்டு **இடையனும்** வந்தான் | 1<br>1 | 2 |
| 27 | **ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறியிட்டு எழுதுக.**<br>**"**அப்பா**!** ஏழாம் திருநாளுக்கு நானும் உன் கூட வரவா**?"** என்று மாணிக்கம் கேட்டான்**.** | 2 | 2 |
| 28 | **ஏதேனும் ஒன்றனுக்கு புணர்ச்சி விதி தருக.**<br>**அ) வெஞ்சினம் – வெம்மை + சினம்**<br>விதி 1 : ஈறுபோதல்<br>விதி 2 : முன்னின்ற மெய் திரிதல்<br>**ஆ) மண்ணரசு – மண் + அரசு**<br>விதி 1 : தனிக்குறில் முன்ஒற்று உயிர்வரின் இரட்டும்<br>விதி 2 : உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பு | 1<br>1<br>1<br>1 | 2 |

| | | | |
|---|---|---|---|
| 29 | **ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.**<br>**அ) போற்றி – போற்று + இ**<br>போற்று – பகுதி<br>இ - வினையெச்ச விகுதி<br>**ஆ) சுழன்று – சுழல்(ன்) + ந் + உ**<br>சுழல்(ன்) – பகுதி (ல் - ன் ஆனது விகாரம்)<br>ந் - இறந்தகால இடைநிலை<br>உ - வினையெச்ச விகுதி | 1<br>1<br>1<br>1 | 2 |
| 30 | வல்லினம் மிகும் இடங்களுக்குரிய விதிகள் இரண்டினை எழுதுக.<br>1. அந்த, இந்த, என்னும் சுட்டுத்திரிபு அடுத்தும் எந்த என்னும் வினாத்திரிபு அடுத்தும் ஒற்று மிகும்<br>எ.கா: அந்தச்சிலை, எந்தக் காலம்<br>2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் ஒற்று மிகும்.<br>எகா: ஓடாக்குதிரை | | 2 |
| V | **சிறுவினா( எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.** | | **2x4=8** |
| 31 | **பாண்டியன் பரிசாகிய பேழைக்குள் இருந்தன யாவை?**<br>❖ அன்னத்தின் மூதாதையருள் ஒருவன், போரில் பாண்டிய மன்னனுக்குச் செய்த உதவிக்காக அவனுக்குப் பாண்டியன், கதிரை நாட்டை வழங்கினான்.<br>1. கதிரை நாட்டுரிமையைக் குறிக்கும் பட்டயம்.<br>2. பரிசாகத் தந்த உடைவாள்<br>3. மணிமுடி<br>4. அணிகலன்கள்<br>5. நம் பகைவரை அழிப்பதற்கேற்ற ஒரு குறிப்பும்<br>❖ இவையாவும் ஒரு பேழையினுள் வைக்கப்பட்டுப் பரிசாய் வழங்கப்பட்டன. அப்பெட்டியே பாண்டியன் பரிசாகும். | **1**<br>**1**<br>**1**<br>**1** | **4** |

| | | | |
|---|---|---|---|
| 32 | **இடஞ்சுட்டி விளக்குக.**<br>**நல்லது செய்த லாற்றீ ராயினும்**<br>**அல்லது செய்த லோம்புமி னதுதான்**<br>**இடம் :**<br>❖ இவ்வடிகள் நரிவெரூஉத்தலையார் பொருண்மொழிக்காஞ்சி என்னும் துறை அமையப் பாடிய புறநானூற்றுப் பாட்டில் உள்ளன.<br>❖ பயனில்லாத முதுமைப்பருவம் எய்தியவர்களை விளித்து, அவர்களுக்கு நல்லாற்றுப் படுத்தும் நெறி எ.்.து என அறிவுறுத்தும் போது அவர் இவ்வடிகளைக் கூறுகிறார்.<br>**பொருள் :**<br>❖ உயிருடன் வாழும் போதே நல்லது செய்யுங்கள் அ.்.து இல்லாததாயின் தீயதைச் செய்தலையாவது கைவிடுங்கள்<br>**விளக்கம் :**<br>❖ மீன் முள்ளைப் போல நரை முதிர்ந்து, தோல் திரைந்து, முதுமை எய்தியும் பயனில்லை.<br>❖ நிலையில்லாத உடம்பு நிலைத்துள்ள போதே நிலையானதைத் தேடிக் கொள்ள வேண்டும்.<br>❖ நீர், கூரிய மழுவாகிய ஆயுதத்தினை ஏந்திய வலிமை வாய்ந்த எமன் உம் உயிர் கவர வரும்போது வருந்திப் பயனில்லை.<br>❖ உயிருடன் வாழும் போதே நல்லது செய்யுங்கள்.<br>❖ அ.்.து இயலாதாயின் தீயதைச் செய்தலையாவது கைவிடுங்கள்.<br>❖ அதுவே எல்லோரும் விரும்புவது.<br>❖ அதுவே மறுமையில் உம்மை நற்கதி சேர்க்கும் வழியுமாகும் என்று முதுமையுடையாரிடம் நரிவெரூஉத்தலையார் தனிமனிதனுக்கும் உலகிற்கும் சிறந்த மெய்ப்பொருளைக் கூறியுள்ளார். | 2<br>1<br>1 | **4** |
| 33 | **காடு எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது?**<br>**மரகதக் கோட்டை:**<br>❖ தூய்மையாகவும் பச்சைப்பசேல் எனவும் தோன்றும் காடு கோட்டையைப் போன்றது.<br>❖ அக்கோட்டைக்குச் சுற்றுமதில் முட்புதர்களும் நெருஞ்சி முள்ளும் கள்ளியும் ஆகும்.<br>**நுழைவு வாயில்:**<br>❖ அக்கோட்டையின் நுழைவு வாயில், அக்காட்டினுள் செல்லும் ஒற்றையடிப் | | |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | பாதையாகும்.<br>**தூண்கள்:**<br>❖ அக்கோட்டையின் தூண்கள், ஓங்கி வளர்ந்துள்ள மரங்கள்.<br>**கொடிகள்:**<br>❖ அம்மரங்களில் தோன்றிய பூக்கள் கொடிகளாகும்.<br>**காடு ஒரு மரகதக் கோட்டை:**<br>❖ சூரியனாலும் நிலவாலும் அக்கோட்டையாகிய காட்டுக்குள் புகமுடியாது.<br>**காட்டுக் கோட்டை:**<br>❖ அக்காட்டிலுள்ள வயது முதிர்ந்த மரத்தினது பட்டை, முதலையின் உடல் நிறத்தைக் கொண்டிருக்கும்.<br>❖ கள்ளிப்புதரின் மீது பிரண்டைச்செடிகள் பரவிப் படர்ந்திருக்கும்.<br>❖ முழு வரகரசி போன்ற கறையான், ஆலமரத்தினது அடிமரத்தின் உட்பகுதியினை அரிக்கும். ஆனால், அடிமரத்தை விழுந்து விடாது அதன் விழுதுகள் தாங்கி நிற்கும்.<br>❖ கோவைச் செங்காய்கள் கெம்பின் நிறமான சிவப்பினையும் மரகதத்தின் நிறமான பச்சையினையும் கொண்டு விளங்கும்.<br>❖ ஏழை மக்கள், உணவு கிட்டியபோது உண்டு மகிழ்ந்து, கிட்டாத போது வாடி இருப்பர். அது போலக் காடு, மழை பொழிந்தால், தழைத்தும், கடும் வெயிலின் போது வாடியும் இருக்கும்.<br>❖ எனினும், அக்காடு தன்னிடமுள்ள இலை, பூ, கனி, காய், தழை, மரம் முதலியவற்றை மனிதர்களுக்கும் மற்ற உயிரினங்களுக்கும் கொடுத்து, அழிவினை ஏற்று வாழ்கின்றன.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கவும்)** | | **4** |
| **ஆ)** | **சிறுவினா( எவையேனும் இரண்டனுக்கு விடை தருக.)** | | **2x4=8** |
| **34** | **முற்காலத்தும் இக்காலத்தும் வழங்கும் இசைத்தமிழ் நூல்கள் யாவை?**<br>**முற்காலத்து விளங்கிய இசைத்தமிழ் நூல்கள் :**<br>1. பெருநாரை<br>2. பெருங்குருகு<br>3. இசை நுணுக்கம்<br>4. தாளவகையோத்து என்பனவாகும்<br>**இக்காலத்து விளங்கும் இசைத்தமிழ் நூல்கள்**<br>1. கந்தபுராணக் கீர்த்தனை<br>2. பெரியபுராணக் கீர்த்தனை<br>**3.** சங்கீத சந்திரிகை என்பனவாகும். | **2**<br>**2** | **4** |

| | | | |
|---|---|---|---|
| 35 | **‘ஆ’ வின் வாயிலாக மனிதன் பெறும் பயன்கள் யாவை?**<br><br>**மாடு என்றால் செல்வம்:**<br>❖ பண்டையுலகம் முழுமையும் மாடே, **மக்கள் செல்வமாய்** இருந்தது.<br>❖ அதனால் செல்வம் **மாடென** வழங்கப்பட்டது.<br>**"கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு<br>மாடல்ல மற்றை யவை"** **(குறள் – 400)**<br><br>**இரு நிலத்தார்க்கும் உதவிய மாடு:**<br>❖ மக்களுக்கு **முல்லை** நிலத்திலேயே **உழவு** தோன்றியது.<br>❖ அது **மருத** நிலத்தில் சிறப்படைந்தது.<br>❖ முன்னதில் **புன்செய்ப்** பயிரும் பின்னதில் **நன்செய்ப்** பயிரும் விளைவிக்கப்பட்டன.<br>❖ மாடு **முல்லை, மருதம்** ஆகிய இருவகை நிலத்தாருக்கும் **ஊனும் பாலும்** தந்து உதவியது.<br>❖ இருவகை வேளாண்மைக்கும் **உழுது இறைத்து** உதவியது.<br><br>**உணவை ஆக்குவதும் உணவாவதும் மாடு:**<br>❖ மாட்டின் **ஊனும் பாலும்** மட்டுமல்லாமல் அதன் **தோல், கொம்பு, உரசனை (ரோசனை) வால்மயிர், சாணம்** முதலிய பிறவும் பயன்பட்டன.<br>❖ **உணவை விளைவிப்பதும் தானும் உணவாவதும்** ஆகிய **வேறு பல்லாற்றானும்** உதவுவது மாடு.<br><br>**ஐயமுதம் ஈந்த மாடு:**<br>❖ பால் முதல் நெய்யீறாயுள்ள<br>1. பால்<br>2. தயிர்<br>3. மோர்<br>4. வெண்ணெய்<br>5. நெய் ஐந்தும் **ஐயமுதம்** (பஞ்சாமிருதம்) எனப்படும்.<br>எனவே, முன்னைத் தமிழர் மாட்டினைச் செல்வமாய்க் கருதினர்.<br><br>**இருபால் கன்று ஈனுவதால்**<br>❖ ஆவின் வாலையும் எருதின் வாலையும் பற்றி ஆழமான | | **4** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | ஆற்றைக் கடந்தனர்.<br>❖ எருது ஊர்தியாக உதவிப் பொதியுஞ் சுமந்தது.<br>❖ இன்றும் வண்டியிழுக்கின்றது.<br>❖ **ஆவும் ஆவேறும்** மக்களுக்குப் பயன்படுவன.<br>❖ அவற்றுள் ஆவே **அமைதியுடைமையும் அமுதளித்தலும்** இருபால் **கன்று ஈனுதலும்** பற்றிச் சிறப்பாய்ப் போற்றப்பட்டது.<br>**(எவையேனும் நான்கு கருத்துகள் இருப்பின் முழு மதிப்பெண் வழங்கவும்)** | | |
| 36 | **முதன் முதலில் கட்சி அமைப்பு எவ்வாறு உருவாகியது?**<br>❖ செல்வாக்கு ஏன் பரம்பரையாக இருக்க வேண்டும்? புதியவர்கள் ஏன் தம்திறமையாலும் உழைப்பாலும் செல்வாக்குப் பெற்றுத் தலைமை பெறக் கூடாது? இவ்வாறு சிலர் எண்ணியபோது ஒரு வழிதோன்றியது.<br>❖ தேர்தல் நேரத்தில் ஆள் திரட்டித் துன்புறாமல், அதற்கு முன்னிருந்தே ஒரு கூட்டத்தைச் சேர்த்துக் கட்டுப்படுத்தி வைத்து,**அந்தக் கூட்டத்தின் துணையையும் உதவியையும்**<br>**கொண்டு தேர்தலில் வெற்றி பெற வழிவகுத்தனர் அதுதான் கட்சி அமைப்பு** என்ற முறை உருவாகக் காரணமாக இருந்தது. | 2<br><br>2 | **4** |
| VI | **எவையேனும் மூன்றனுக்கு விடை தருக.** | | **3x4=12** |
| 37 | **திரிபணியைச் சான்றுடன் விளக்குக.**<br>**<u>அணி இலக்கணம்:</u>**<br>செய்யுளின் அடிகள் தோறும் அமைந்த முதல் சீர்களில் முதல் எழுத்து மட்டும் வேறுபட்டிருக்க பிற எழுத்துகளை ஒரே வகையாக அமைந்து பொருள் வேறுபடுவது திரிபணி ஆகும். (முதலெழுத்து மட்டும் திரிந்து பொருள் வேறுபடுவது)<br>**சான்று:-**<br>"திருவேங் கடத்து நிலைபெற்று நின்றன; சிற்றன்னையால்<br>தருவேங் கடத்துத் தரைமே னடந்தன; தாழ்பிறப்பின்<br>உருவேங் கடத்துக் குளத்தே யிருந்தன; வுற்றழைக்க<br>வருவேங் கடத்தும்பி யஞ்சலென் றோடின மால் கழலே" | 2<br><br>1 | **4** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **அணிப்பொருத்தம்:-**<br>முதலடியில் திருவேங்கடம் என்பது மலையைக் குறிக்கிறது. இரண்டாமடியில் தரு + வேம் + கடம் எனப்பிரிந்து மரங்கள் வேகின்ற காடு எனப் பொருள் தந்தது. மூன்றாம் அடியில் உருவேங்கள் + தத்து எனப் பிரிந்து உருவத்தை உடைய எங்கள் துன்பம் என்றும், நான்காமடியில் வருவேம் + கடம் + தும்பி எனப் பிரிந்து மதங்கள் உடைய தும்பிக்கையுடைய யானை அழைத்தவுடன் வருவோம் எனவும் பொருள் மாறுபட்டு வந்துள்ளது.<br>**(அல்லது)** | 1 | |
| | **உவமையணியைச் சான்றுடன் விளக்குக.**<br>**<u>அணி இலக்கணம்</u>**<br>உவமை ஒரு தொடராகவும் உவமேயம் மற்றொரு தொடராகவும் அமைந்து இடையில் **போல, போன்ற** எனும் **உவம உருபுகள் வெளிப்படையாய்** அமைந்திருக்குமாயின் அ.்.து உவமையணியாகும்.<br>**<u>சான்று</u>**<br>**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை**<br>**இகழ்வார்ப் பொறுத்தல் தலை."**<br>**<u>உவமை</u>** : அகழ்வாரைத் தாங்கும் நிலம்<br>**<u>உவமேயம்</u>** : தம்மை இகழ்வாரைப் பொறுப்பவர்<br>**<u>உவம உருபு</u>** : போல<br>**<u>விளக்கம்</u>**<br>பூமி தன்மீது நின்று தன்னைத் தோண்டுபவரையும் விழாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. அதுபோல, தமக்குக் குற்றமானவற்றைச் செய்து தம்மைப் பற்றிக் குற்றமானவற்றைப் பேசி இகழ்வாரையும் பொறுத்தல் வேண்டும் என்பதே சான்றின் விளக்கமாக அமைகிறது. | 2<br>1 | **4** |





ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **அணிப் பொருத்தம் :**<br>நிலம் - பொறுத்துக்கொள்பவர்க்கும், தோண்டுதல் – இகழ்தலுக்கும், தாங்கி கொள்ளுதல் – பொறுத்துக் கொள்வதற்கும் பொருத்தமான உவமைகளாகும். இடையே **போல** என்னும் உவமஉருபு வெளிப்படையாக வந்துள்ளமையால் இவ்வணி உவமையணியாயிற்று. இக்கூற்றே அணிப்பொருத்தமாக அமைகிறது. | 1 | |
| 38 | **தமிழாக்கம் தருக.**<br>அ) அறிவே ஆற்றல்<br>ஆ) வருமுன் காப்பதே சிறந்தது<br>இ) சிறுதுளிப் பெருவெள்ளம்<br>ஈ) உன்னுடைய வெற்றிக்குப் பாராட்டுகள் | 1<br>1<br>1<br>1 | **4** |
| 39 | **இலக்கிய நயம் பாராட்டல்**<br>**திரண்டகருத்து, மையக்கருத்து**<br>**ஏற்புடைய நயங்கள் (மூன்று இருப்பின் முழு மதிப்பெண்** | 2<br>2 | **4** |
| 40 | **வாழ்க்கை நிகழ்வில் பழமொழி**<br>**பழமொழி விளக்கம்**<br>**ஏற்ற வாழ்க்கை நிகழ்வினைக் கதை வடிவில் எழுதுதல்** | 2<br>2 | **4** |
| VII | **நெடுவினா (இருபது வரிகளில்)** | | **2x6=12** |
| 41 | **சிலப்பதிகார ஊர்சூழ்வரியில் கண்ணகியின் சூளுரையம், கோவலனைக் கண்ட பொழுது நிகழ்ந்த அற்புதத்தையும் எழுதுக.**<br>**கண்ணகியின் சூளுரை:**<br>கண்ணகி தனது மற்றொரு சிலம்பினைக் கையில் ஏந்தி, மதுரை நகர் வீதி வழியே சென்றாள்.<br>**எஞ்சிய சிலம்பு**<br>❖ முறையில்லாத அரசனது ஊரிலிருந்து வாழும் 'பத்தினிப் பெண்டிர்காள் ! என் கணவன் கள்வன் அல்லன் என்பதற்குச் சான்றாய் என் சிலம்புகளுள் மற்றொன்று' (ஈதொன்று) என்னிடம் உள்ளது, பாருங்கள்.<br>**என் வினைப்பயன்**<br>❖ இம்மாலைப் பொழுதில் பிறர் யாரும் அடையாத பெருந்துயரத்தினை யான் அடைந்தேன், ஈதொன்று - இ்.து என் வினைப் பயனாகும்.<br>**அநீதியான செயல்**<br>❖ "என் கணவரிடமிருந்து சிலம்பைக் கவரக் | 3 | |





ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | கள்வன் என்று கூறி அவனைக் கொன்றார்கள், ஈதொன்று –இ∴து அநியாயம்.<br>**புதுமையான செயல்**<br>❖ இறந்த என் கணவனை உயிரோடு காண்பேன் ஈதொன்று - இவ்வாறு காணும் செயல் புதுமை அன்றோ?<br>**என் சூளுரை**<br>❖ காதற் கணவனைக் கண்டால் அவன் வாயில் இனிய மொழியினைக் கேட்பேன். ஈதொன்று - இ∴து ஒரு சூளுரையாகும்.<br>**உங்களுக்கு ஒரு வாய்ப்பு**<br>❖ அவ்வாறு அவன் கூறும் நன்மொழிகளை நான் கேட்காவிட்டால் என்னை இகழுக. ஈதொன்று இ∴து உங்கட்கு ஒரு வாய்ப்பாகும் என்று கூறும் கண்ணகியின் கோபக் கூற்றில் ஒவ்வொரு ஈதொன்றிலும் ஒவ்வொரு தனித் தனி பொருள் அமைந்துள்ளது.<br>**கோவலனைக் கண்ட போது நிகழ்ந்த அற்புதம்:**<br>**கோவலன் எழுந்தான்**<br>❖ கணவனின் துயர் கண்டு புலம்பிய கண்ணகி, அவனது, திருத்தங்கிய மார்பினைத் தன் மார்போடு பொருந்தத் தழுவிக் கொண்டாள்.<br>❖ அவ்வளவில் கோவலன் எழுந்து நின்றான்.<br>**கண்ணீர் துடைத்தான்**<br>❖ அவன் கண்ணகியை நோக்கி, “உன் முழுமதி போலும் ஒளி பொருந்திய முகம் கன்றியதே” ! என்று தன் வாயால் கூறினான் ;<br>❖ அவள் கண்ணீரைத் தன் கையால் துடைத்தான்.<br>**அமரர் குழுவோடு சேர்ந்தான்**<br>❖ அப்பொழுது கண்ணகி அழுது, ஏக்கமுற்று நிலத்தில் வீழ்ந்தாள் ;<br>❖ தன் கணவனுடைய தொழத்தக்க திருந்திய அடிகளைத் தன் இருகைகளாலும் பற்றிக் கொண்டாள்.<br>❖ அவ்வளவில் கோவலன் இவ்வுடலை விட்டு நீங்கிச் சுவர்க்கம் புகும்பொருட்டு எழுந்தான் ;<br>❖ தேவர்கள் வாழும் வானுலகம் புகுந்தான்.<br>இவையே கோவலனைக் கண்ணகி கண்டபோது நடந்த வியத்தகு செயல்களாகும்.<br>**(அல்லது)** | 3 | **6** |

ஸ்ரீ வித்யபாரதி

| | | | |
|---|---|---|---|
| | **தன்னம்பிக்கையற்றுக் காணப்படும் இளைஞனிடம் தாராபாரதி கூறும் அறிவுரைகளைத் தொகுத்து எழுதுக.**<br>**உழைக்கத் தயங்காதே! :**<br>❖ 'எனக்கு வேலை கிட்டவில்லை' என்று மூலையில் சோர்ந்து கிடக்கும் வாலிபனே! அதற்குக் காரணம் உடல் உழைப்பில்லா வேலையையே நாடுவதேயாகும். இவ்வாறு இருந்துகொண்டு என் வாழ்வு பாலைவனமாயிற்று என்று பலமுறை சொல்வதால் பயன் என்ன? | 1 | |
| | **கையே மூலதனம் ! :**<br>❖ தொழில் செய்ய என்னிடம் மூலதனம் இல்லை என்று நீ கூறுவது அறியாமையாகும். மூலதனத்தை உருவாக்கும் பத்து விரல்களைப் பெற்றுள்ள நீ, முயன்றால் கருங்கல் பாறையே நொறுங்கி விழும்; இந்த உலகம் உன் கைவசமாகும்.<br>❖ "என் முயற்சியின் முன் இமயம் என் கட்டைவிரலைவிடக் குட்டையாகும்; விரிந்த வானம் என் சுட்டுவிரலின் நகமாய்ச் சுருங்கியது" என்று பிறருக்குச் சொல். | 1 | **6** |
| | **பாலைவனமும் சோலைவனம் ஆகும்! :**<br>❖ உன் தோள்களின் வலிமையே உன் வாழ்வினை உருவாக்கும் தொழிற்சாலை. நீ விரும்பி ஓரிடத்தில் உன் உழைப்பை நல்கினால் அது மலர்ச்சோலையாய் மாறும். ஆகவே இனி, உனக்குத் தோல்வியே நேரிடப்போவதில்லை. அடுத்து உன் இலக்காய் இருக்கப்போவது தொடுவானந்தான். | 1 | |

| | | | |
|---|---|---|---|
| | **உலகம் உன்னால் மலரும் :**<br>❖ வலிமையின் ஊற்றாய் விளங்கும் உன் கால்நகம் கீறிய கோடுகள் வழியே கங்கையும் சிந்துவும் பெருக்கெடுத்து ஓடும். ஆற்றல்மிக்க உன் தோள்கள் இரண்டும் வடதுருவத்தையும், தென்துருவத்தையும் இணைக்கும் பாலங்களாய் அமையும்.<br>**விண்ணை வெற்றிகொள்! :**<br>❖ மாபெரும் சக்தி வாய்ந்த மானிடனே! நீ அற்பமான மண்புழுவன்று, விண்வெளியை வெற்றி கொள்ள உன் மாபெரும் வலிமையினை அதனிடம் காட்டு. அப்போது இந்த மண்ணிலும் அந்த விண்ணிலும் நிகழவிருப்பவை உன் செயல்களல்ல; விண்ணுலகத்தவரை நோக்கிச் செய்யப்படும் வேள்விகளே ஆகும். | 1<br>1 | |
| 42 | **சமரசக் கோயிலை அமைத்தவர் யார்? சமரச உணர்விற்கு எடுத்துக்காட்டாக அவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.**<br>**சமரசக் கோயிலை அமைத்தவர் : இராமலிங்க அடிகள்**<br>**சமரசக் கோயில்**<br>❖ இன்றைக்குச் சுமார் அரைநூற்றாண்டுக்கு முன்னர்த் தமிழ்நாட்டில் வாழ்ந்து மறைந்த நம் இராமலிங்க அடிகளார், சாதி சமய வேறுபாடுகளைப் பலவுரைகளால் மறுத்தார்.<br>❖ சமரச ஞானத்தை அறிவுறுத்திச் சென்றார்.<br>❖ கோயில்கள் எல்லாம் சாதிக் கோயில்களாய் மாறியது கண்டார்.<br>❖ அனைவரும் வந்து வழிபடுவதற்கெனச் சமரசக் கோயிலை வடலூரில் நிறுவினார்.<br>❖ எச்சபை பொதுவென இயம்பினர் அறிஞர்கள் அச்சபை இடங்கொள்ளும் அருட்பெருஞ்சோதி என்று அடிகள் அருளிச் சென்றார்.<br>❖ 'அச்சபை அந்நோக்குடன்' சுவாமிகளால் நிறுவப்பட்டது.<br>**சமரசமே கடவுள் காட்சி**<br>❖ சமரசம் என்பது நாடு, மொழி, சமயவெறி, சாதி முதலியவற்றில் கட்டுப்படாமல் அவற்றைக் கடந்து நிற்பது. | 1<br>1<br>1 | **6** |

| | | | |
|---|---|---|---|
| | ❖ எல்லா நாட்டினர் எல்லா மொழியினர். எல்லா சமயத்தினர், எல்லாச் சாதியினரிடத்திலும் புகுந்து நிற்பது சமரசஞானம்.<br>❖ நாடு, மொழி, சமயம், சாதி முதலியவற்றைக் கொண்டு சமரச உணர்வை இழப்பது அறிவுக் குறைபாடு.<br>❖ இந்தப் பன்மைகளிடையே பரவிநிற்கும் ஒருமைப்பாடே சமரசம்.<br>❖ அத்தகைய சமரசமே கடவுட்காட்சியை நமக்கு வழங்கும்.<br>❖ அத்தன்மையையே இயற்கையன்னை மக்களிடையில் பாதுகாக்க முனைந்து நிற்கிறாா்.<br>❖ அவள் முயற்சிக்கு எவருமே குறுக்கே நிற்கக் கூடாது.<br>❖ இதுவரை மனிதன் தன்னுடைய அறியாமையால் இயற்கையன்னையை மறந்து துன்பப்பட்டது போதும்.<br>❖ இனிமேலாவது சமரசக் கொள்கைக்கு நெஞ்சில் இடந்தந்து, வாழ்வானாக ! மற்றவரையும் வாழ்விப்பானாக.<br><br>**அருட்பெருஞ்சோதி**<br>❖ நீதியும் மெய்ப்பொருளும் அழிவில்லா வாழ்க்கையும் சுகமும் முதலும் நடுவும் இறுதியும் அருங்பெருஞ்சோதி எனவறிந்தாா்<br>❖ அவா், சமயங்களும் மதங்களும் மாா்க்கங்களும் அவற்றின் ஆசாரக் கொள்கைகளும், வேறுபாடுகளும் சுத்த சன்மாா்க்கத்திற்குத் தடைகளாகக் கருதினாா்.<br>❖ அவை தம் மனத்தில் பற்றாவண்ணம் அருள்புரிய அருட்பெருஞ்சோதி அற்புதக் கடவுளை வேண்டினாா்.<br>❖ மேலும், சுத்த சன்மாா்க்கத்தின் முக்கிய இலட்சியமாகிய ஆன்ம நேய ஒருமைப் பாட்டுரிமை தம்மை விட்டு விலகாது நிறைந்து விளங்கச் செய்ய வேண்டுமென்று வேண்டினாா்.<br>**(அல்லது)** | 1<br><br>1 | |
| | **ஓவியக்கலை தமிழகத்தில் சிறந்திருந்தது என்பதை விளக்குக.**<br><br>**ஓவியம் யோகக்கருவி ! :**<br>❖ ஓவியக்கலை தமிழகத்தில் உயரிய நிலையைப் பெற்றிருந்தது. உலகில் காணும் உயிருள்ள, உயிரில்லா எல்லாப் பொருள்களையும் தங்கள் கற்பனையால் காணப்பெற்ற | 2 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பொருள்களையும் அவ்வவற்றின் உருவங்கள் போலத் தோன்றுமாறு தமிழ்நாட்டு ஓவியர்கள் ஓவியங்களாய்த் தீட்டினர்.<br>❖ அவர்கள் ஓவியத்தை வெறுந்தொழிலாய்க் கருதாமல் ஒரு யோகக் கருவியாகவே கருதினர். | | |
| | | **7 ஆம் நூற்றாண்டு முதல் ஓவியக்கலை :**<br>❖ தமிழ்நாட்டில் இன்று நாம் காணும் ஓவியங்களுள் மிகவும் தொன்மையானவை பல்லவப் பொருமன்னர் காலத்தவையாகும்.<br>❖ ஏறத்தாழ கி.பி. 7 ஆம் நூற்றுாண்டின் தொடக்கத்திலிருந்துதான் ஓவியங்கள் காணப்படுகின்றன.<br>❖ இவற்றிற்கு முற்பட்டவை காலப்போக்கில அழிந்தும் மறைந்தும் போயின. | 1 | **6** |
| | | **ஓவியத்துறையில் பல்லவர் பணி :**<br>❖ ஓவியத்துறையில் பல்லவ மன்னர்கள் பெரும்பணி ஆற்றியுள்ளனர்.பல்லவ மன்னர் மகேந்திரவர்மனே ஓவியக்கலையில் சிறந்து விளங்கியவன்.<br>❖ சோழ மன்னர்களும் ஓவியக்கலைப்பணியில் ஈடுபட்டிருந்தனர். | 1 | |
| | | **கோவில்களில் ஓவியம் :**<br>❖ தமிழ் மன்னர் வளர்த்த ஓவியங்களை அவர் எடுப்பித்த கோவில்களின் நுழைவாயிலின் இரு பக்கங்களிலும் கருவறைச் சுவர்களிலும் பிரகாரங்களிலும் விதானத்திலும் தீட்டினர்.<br>❖ அவர்களால் தீட்டப்பெற்ற ஓவியங்களை மாமண்டூர்க் குகைகளின் வெளி மண்டபத்திலும் காஞ்சி கைலாசநாதர் கோவில், பனமலைக் கோவில், தஞ்சைப் பெருவுடையார் கோவில் முதலிய பல இடங்களிலும் காணலாம். | 1 | |
| | | **ஆடல்மகளின் அழகிய தோற்றம் :**<br>❖ இவற்றுள் பனமலையில் உள்ள மண்டபத்தில் காணப்படும் எழிலார்ந்த ஆடல்மகளின் ஓவியம் மிகச்சிறப்பு வாய்ந்ததாகும்.<br>❖ இந்த ஓவியத்தில் அமைந்த வண்ணச்செறிவும் உணர்ச்சிப்பொலிவும் நம்மைக் கவர்கின்றன. | 1 | |

| | | | |
|---|---|---|---|
| 43 | **துணைப்பாட வினா- கருப்பொருளும் சுவையும் குன்றாமல் எழுதுக.**<br>**பால்வண்ணம்பிள்ளை**<br>ஆசிரியர் பெயர், முன்னுரை, முடிவுரை<br>உட்தலைப்புகள், கதைத்தொடக்கம், கதையின் போக்கு, கதையின் முடிவு<br>**(அல்லது)** | 2<br>4 | **6** |
| | **ஒவ்வொரு கல்லாய் ( கதைமாந்தர் திறனாய்வு)**<br>ஆசிரியர் பெயர், முன்னுரை , முடிவுரை<br>கதைச்சுருக்கம்<br>உட்தலைப்பு, கதையின் போக்கு, கதையின் முடிவு | 2<br>4 | **6** |
| VII<br>44 | **அடிமாறாமல் எழுதுக**<br>**(அ) சிக்கனம்**<br>உரைநடையின் சிக்கனந்தான் கவிதை : ஓங்கும்<br>உணர்ச்சிகளின் சிக்கனந்தான் அடக்கம் ; காதல்<br>வரவேற்பின் சிக்கனந்தான் பெண்ணின் நாணம் ;<br>மாளிகையின் சிக்கனந்தான் குடிசை யாகும் ;<br>உரிமைகளின் சிக்கனந்தான் சட்ட திட்டம் ;<br>உணவுகளின் சிக்கனந்தான் பங்கீடாகும் ;<br>அரசியலின் சிக்கனந்தான் இரண்டே கட்சி ;<br>அனுபவத்தின் சிக்கனந்தான் நீதி நூல்கள்<br>- உவமைக்கவிஞர் சுரதா<br><br>ஆ) உதவி வரைத்தன் றுதவி உதவி<br>செயப்பட்டார் சால்பின் **வரைத்து.** | 4<br><br><br><br>2 | **6** |

## தமிழ்த்துறை

## ஸ்ரீ வித்யபாரதி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி,

**சக்கராம்பாளையம்,அகரம் அஞ்சல், எலச்சிப்பாளையம்,**
**திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 637202.**

**CELL : 99655-31727, 99655 -35967**
**96775 – 58960.**

ஸ்ரீ வித்யபாரதி